## பள்ளிக் கல்வித்துறை - விழுப்புரம் மாவட்டம்

## தமிழ்த் திறனறித் தேர்வு - (TTSE) 2023 - 24 மாதிரித் தேர்வு - 3

## (பாடப்பகுதி - ஒன்பதாம் வகுப்பு – அனைத்து இயல்களும்

1. கூற்று - மனிதன் முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஓவியங்கள் முதலியவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்று, பின்னர் ஒலிகளை உண்டாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினான்.

காரணம் – மெய்ப்பாடுகள், சைகைகள், ஓவியங்கள் மூலம் பருப்பொருள்களை மட்டுமே ஓரளவு உணர்த்த முடிந்தது. நுண்பொருள்களை உணர்த்த இயலவில்லை.

(அ) கூற்று சரி காரணம் தவறு (ஆ) கூற்று தவறு காரணம் சரி

(இ) கூற்று காரணம் இரண்டும் சரி (ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

2. கூற்று - 1 - வில்லியம் ஜோன்ஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனவும் பெயரிட்டார்.

கூற்று - 2 - 1876 இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்

(அ) கூற்று 1- சரி , கூற்று 2 - தவறு (ஆ) கூற்று 1 - தவறு , கூற்று 2 - சரி

(இ) கூற்று 1, 2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

3. பின்வருவனவற்றுள் தவறான இணையைத் தேர்வு செய்க

(அ) தமிழ் - சங்க இலக்கியம்

(ஆ) கன்னடம் - லீலா திலகம்

(இ) தெலுங்கு - பாரதம்

(ஈ) மலையாளம் - ராம சரிதம்

4. "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!. என்ற கூற்றுடன் தொடர்புடையவர்

(அ) ஈரோடு தமிழன்பன் (ஆ) ந. முத்துக்குமார்

(இ) கல்யாண சுந்தரம் (ஈ) கு.ப. ராஜகோபாலன்

5. காலம் பிறக்கும் முன் பிறந்தது, எந்தக் காலமும் நிலையாய் இருப்பது

(அ) இலக்கியம் (ஆ) உலகம்

(இ) இலக்கணம் (ஈ) தமிழ்

6. எண்வகை வனப்புகளை நிரல் படுத்துக

(அ) அம்மை, அழகு, இயைபு, புலன், இழைபு ,தொன்மை, தோல், விருந்து.

(ஆ) அம்மை, அழகு, புலன், இயைபு, விருந்து, தோல், தொன்மை, இழைபு.

(இ) அம்மை, அழகு, இழைபு , புலன், விருந்து, தோல், தொன்மை, இயைபு.

(ஈ) அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

7. உன்னோடு உவந்து உரைக்கும்

விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – இதில் உன்னோடு என்று குறிப்பிடப்பெறுவது

(அ) கிளி (ஆ) அன்னம்

(இ) தமிழ் (ஈ) விறலி

8. பின்வருவனவற்றுள் தமிழ்விடு தூது பற்றிய தவறான கூற்று எது?

(அ) 268 கண்ணிகளைக் கொண்டது

(ஆ) 1930 இல் உ.வே.சா. முதன் முதலில் பதிப்பித்தார்.

(இ கலிவெண்பாவால் இயற்றப்பட்டது.

(ஈ) இந்நூலின் ஆசிரியர் நப்பூதனார்.

9. பொருத்தி விடை தேர்க

| | |
|---|---|
| 1. ப்ரௌசர் [browser] | (i) - இணையவெளி |
| 2. க்ராப் [crop] | (ii) - ஏவி அல்லது சுட்டி |
| 3. கர்சர் [cursor] | (iii) - உலவி |
| 4. சைபர்ஸ்பேஸ் [cyberspace] | (iv) – செதுக்கி |

(அ) (1) – (iv) , (2) – (ii) , (3) – (i) , (4) – (iii)

(ஆ) (1) – (iv) , (2) – (i) , (3) – (iii) , (4) – (ii)

(இ (1) – (iii) , (2) – (iv) , (3) – (ii) , (4) – (i)

(ஈ) (1) – (iii) , (2) – (ii) , (3) – (i) , (4) – (iv)

10. கூற்று - அறிவியல் கருத்துகளுக்கான கலைச்சொற்களை எல்லாம் நம் மொழியிலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

காரணம் - தாய்மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கையை விட வேற்று மொழிச் சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும்.

(அ) கூற்று சரி காரணம் தவறு (ஆ) கூற்று தவறு காரணம் சரி

(இ) கூற்று காரணம் இரண்டும் சரி (ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

11. பின்வருவனவற்றுள் பிறவினைத் தொடர் அல்லாதது எது?

(அ) அவன் திருந்தினான்

(ஆ) அவனைத் திருந்தச் செய்தான்

(இ தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்.

(ஈ) பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார்.

12. பின்வருவனவற்றுள் நீர்நிலையைக் குறிக்காத சொல்

(அ) அகழி (ஆ) ஊருணி

(இ) அரண் (ஈ) கண்மாய்

13. பின்வருவனவற்றுள் சர் ஆர்தர் காட்டன் பற்றிய சரியான கூற்றுகள்

(1) இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை

(2) 1829 இல் மேட்டூர் பாசனப் பகுதிக்குத் தனிப் பொறுப்பாளராக ஆங்கிலேய அரசால் நியமிக்கப்பட்டார்.

(3) கல்லணைக்கு கிராண்ட் அணைக்கட் என்ற பெயர் சூட்டினார்.

(4) 1873 ஆம் ஆண்டு அமராவதி அணையைக் கட்டினார்.

(அ) கூற்று 1, 2 சரி (ஆ) கூற்று 2, 3 சரி

(இ) கூற்று 1, 3 சரி (ஈ) கூற்று 1, 4 சரி

14. தொ. பரமசிவன் கூற்றுப்படி குளித்தல் என்பது

(அ) உடம்பினைத் தூய்மை செய்தல்.

(ஆ) அழுக்கு நீக்குதல்.

(இ) வெப்பமடைந்த உடலைக் குளிர வைத்தல்.

(ஈ) நீர்நிலைகளில் நீராடுதல்.

15. பொருத்தி விடை தேர்க

| | |
|---|---|
| 1. இலஞ்சி | (i) - குளிப்பதற்கேற்ற சிறுகுளம் |
| 2. கண்மாய் | (ii) - உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை |
| 3. குண்டு | (iii) - பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர் |
| 4. கூவல் | (iv) - பலவகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம் |

(அ) (1) – (iv), (2) – (ii), (3) – (i), (4) – (iii)

(ஆ) (1) – (iv), (2) – (iii), (3) – (i), (4) – (ii)

(இ (1) – (iii), (2) – (iv), (3) – (ii), (4) – (i)

(ஈ) (1) – (iii), (2) – (ii), (3) – (i), (4) – (iv)

16. “குந்த நிழல் தரக் <u>கந்த</u> மலர் தரக் கூரை விரித்த இலை” – என்ற பாடல் அடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

(அ) உட்கார (ஆ) மேல்

(இ) கவலை (ஈ) மணம்

17. குமந்தனை - சரியான பகுபத உறுப்பிலக்கணத்தை தெரிவு செய்க

(அ) குமை + த்(ந்) + த் + அன் + ஐ (ஆ) குமைந்து + அன் + ஐ

(இ) குமை + த் + அன் + ஐ (ஈ) குமை + த்(ந்) + அன் + அன் + ஐ

18. “அன்னம் ஆடும் அகன் துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்” – என்ற பாடல் அடிகளில் பயின்று வரும் நயம்

(அ) அடி எதுகை (ஆ) அடி மோனை

(இ) அடி இயைபு (ஈ) அடி முரண்

19. பின்வருவனவற்றுள் தொகைச்சொல் அல்லாதது எது?

(அ) கருங்குவளை (ஆ) செந்நெல்

(இ) விரிமலர் (ஈ) தடவரை

20. பின்வருவனவற்றுள் கந்தர்வனின் சிறுகதைத் தொகுப்பு அல்லாதது எது?

(அ) உயிர்த்தேன் (ஆ) சாசனம்

(இ) ஒவ்வொரு கல்லாய் (ஈ) கொம்பன்

21. கூற்று -1 - தமிழ் மற்றும் ஜப்பானிய மொழிகளில் துணைவினைகள் முதல் வினைகளுக்குப் பின்பே இடம்பெறும்.

கூற்று -2 - தமிழின் துணைவினைக் கொள்கை ஆங்கிலத்தின் துணைவினைக் கொள்கையிலிருந்து வேறுபட்டது.

(அ) கூற்று 1- சரி, கூற்று 2 - தவறு (ஆ) கூற்று 1 - தவறு, கூற்று 2 - சரி

(இ) கூற்று 1, 2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

22. ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை-

(அ) முதல் வினை (ஆ) துணை வினை

(இ) தனி வினை (ஈ) கூட்டு வினை

23. "எழுந்தது துகள் ஏற்றனர்மார்பு

கவிழ்ந்தன மருப்பு கலங்கினர்பலர்" - என்ற பாடல் அடிகள்

உணர்த்துவது

(அ) ஏறு தழுவுதல் (ஆ) சல்லிக் கட்டு

(இ) வெட்சிப் போர் (ஈ) கரந்தைப் போர்

24. கூற்று -1 - சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் திரிபுற்று, ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகிறது.

கூற்று -2 - சல்லி என்பது மாட்டின் காலில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும்.

(அ) கூற்று 1- சரி, கூற்று 2 - தவறு (ஆ) கூற்று 1 - தவறு, கூற்று 2 - சரி

(இ) கூற்று 1, 2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

25. "வசியும் வளனும் சுரக்க! என வாழ்த்தி

அணி விழா அறைந்தனன் அகநகர் மருங்கென்" - என்ற பாடல் அடிகள் உணர்த்தும் அணி விழா

(அ) தை நீராட்டு விழா (ஆ) இந்திர விழா

(இ) இளவேனில் விழா (ஈ) வெறியாட்டு விழா

26. பொருத்தி விடை தேர்க

1. தோம் (i) - பொன்

2. கோட்டி (ii) - திண்ணை

3. பொலம் (iii) - மன்றம்

4. வேதிகை (iv) - குற்றம்

(அ) (1) – (iv), (2) – (ii), (3) – (i), (4) – (iii)

(ஆ) (1) – (iv), (2) – (iii), (3) – (i), (4) – (ii)

(இ (1) – (iii), (2) – (iv), (3) – (ii), (4) – (i)

(ஈ) (1) – (iii), (2) – (ii), (3) – (i), (4) – (iv)

27. பின்வருவருபவர்களுள் ஐம்பெருங்குழுவில் இடம்பெறாதவர்

(அ) அமைச்சர் (ஆ) படைத்தலைவர்

(இ) சாரணர் (ஈ) இவுளி மறவர்

28. பின்வருவனவற்றுள் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை அல்லாதது எது

(அ) பூக்கொடி வல்லி (ஆ) முத்துத்தாமம்

(இ) காய்க்குலைக்கமுகு (ஈ) உறுபொருள்

29. பின்வருவனவற்றுள் மணிமேகலையுடன் தொடர்பில்லாத கூற்று

(அ) ஆசிரியர் இளங்கோவடிகள்

(ஆ) வேறு பெயர் மணிமேகலைத் துறவு

(இ புரட்சிக் காப்பியம்

(ஈ) பௌத்த சமயக் காப்பியம்

30. கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு தொல்லியல் பொருட்களின் காலம்

(அ) சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை

(ஆ) சுமார் 2400 ஆண்டுகளுக்கு முற்பட்டவை

(இ) சுமார் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டவை

(ஈ) சுமார் 2700 ஆண்டுகளுக்கு முற்பட்டவை

31. பின்வருவனவற்றுள் அகழாய்வுடன் தொடர்பில்லாத இடம்

(அ) கீழடி (ஆ) அரிக்கமேடு

(இ) வாணியம்பாடி (ஈ) ஆதிச்ச நல்லூர்

32. கூற்று -1 - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்..

கூற்று -2 - ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.

(அ) கூற்று 1- சரி , கூற்று 2 - தவறு (ஆ) கூற்று 1 - தவறு , கூற்று 2 - சரி

(இ) கூற்று 1, 2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

33. பொருத்தி விடை தேர்க

| | |
|---|---|
| 1. தமிழர் நாகரிகமும் பண்பாடும் | (i) - மா. இராசமாணிக்கனார் |
| 2. தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் | (ii) - கா. ராஜன் |
| 3. தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் பறவைகள் | (iii) - அ. தட்சிணாமூர்த்தி |
| 4. தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | (iv) - க. ரத்னம் |

(அ) (1) – (iii) , (2) – (iv), (3) – (ii), (4) – (i)

(ஆ) (1) – (iv) , (2) – (iii), (3) – (i), (4) – (ii)

(இ (1) – (iv) , (2) – (ii), (3) – (i), (4) – (iii)

(ஈ) (1) – (iii) , (2) – (i), (3) – (iv), (4) – (ii)

34. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்

கருமமே கட்டளைக் கல். – இக்குறளில் பயின்று வரும் அணி

(அ) உவமையணி (ஆ) ஏகதேச உருவக அணி

(இ) எடுத்துக்காட்டு உவமையணி (ஈ) தற்குறிப்பேற்றணி

35. மிகுதியான் --------------------- செய்தாரைத் தாம்தம்

----------------------- வென்று விடல். – இக்குறளின் விடுபட்ட சீர்களைத் தேர்க

(அ) மிக்கவை – தகுதியான் (ஆ) தீயவை – தூழின்

(இ) மறந்தும் – கேடு (ஈ) நல்லவை - பெருமை

36. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க

(அ) அகழாய்வு - Inscription

(ஆ) கல்வெட்டியல் - Epigraphy

(இ நடுகல் - Hero Stone

(ஈ) பண்பாட்டுக் குறியீடு - Cultural Symbol

37. சரியான இணையைத் தேர்வு செய்க

(அ) ஜெராக்ஸ் இயந்திரம் - ஹாங்க் மாக்னஸ்கி

(ஆ) தொலைநகல் இயந்திரம்(Fax) - செஸ்டர் கார்ல்சன்

(இ தானியங்கிப்பண இயந்திரம் - ஜான் ஷெப்பர்டு பாரன்

(ஈ) இணைய வணிகம் - ஆட்ரியன் ஆஷ்ஃபீல்டு

38. " அறிவியல் என்னும் வாகனம் மீதில்

ஆளும் தமிழை நிறுத்துங்கள்

கரிகாலன் தன் பெருமை எல்லாம்

கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள் " – என்ற பாடல் வரிகள் இடம் பெற்ற நூல்

(அ) பாரதியார் கவிதைகள் (ஆ) பாரதிதாசன் கவிதைகள்

(இ) கண்ணதாசன் கவிதைகள் (ஈ) வைரமுத்து கவிதைகள்

39. அயல்நாட்டு அறிஞரும் வியந்து பாராட்டும் தொல்காப்பியரின் கோட்பாடு

(அ) எழுத்தியல் கோட்பாடு (ஆ) சொல்லியல் கோட்பாடு

(இ) பிறப்பியல் கோட்பாடு (ஈ) பெயரியல் கோட்பாடு

40. பொருத்தி விடை தேர்க

1. ஓரறிவு (i) – சிப்பி, நத்தை

2. ஈரறிவு (ii) – புல், மரம்

3. மூவறிவு (iii) - நண்டு, தும்பி

4. நான்கறிவு (iv) – கரையான், எறும்பு

(அ) (1) – (ii) , (2) – (iv) , (3) – (iii) , (4) – (i)

(ஆ) (1) – (ii) , (2) – (i) , (3) – (iv) , (4) – (iii)

(இ (1) – (iii) , (2) – (ii) , (3) – (i) , (4) – (iv)

(ஈ) (1) – (iii) , (2) – (ii) , (3) – (iv) , (4) – (i)

41. யாருடைய முயற்சியில் இஸ்ரோ தொடங்கப்பட்டது

(அ) விக்ரம் சாராபாய் (ஆ) சிவன்

(இ) அப்துல் கலாம் (ஈ) மயில்சாமி அண்ணாதுரை

42. செயற்கைக்கோள் ஏவு ஊர்தி பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் (Digital) சேகரிக்கும் சித்தாரா என்ற செயலியை உருவாக்கியவர்

(அ) விக்ரம் சாராபாய் (ஆ) மயில்சாமி அண்ணாதுரை

(இ) அப்துல் கலாம் (ஈ) சிவன்

43. கூற்று -1 - விளித் தொடர்களில் வல்லினம் மிகாது..

கூற்று -2 - பெயரெச்சத்தில் வல்லினம் மிகும்.

(அ) கூற்று 1- சரி , கூற்று 2 - தவறு (ஆ) கூற்று 1 - தவறு , கூற்று 2 - சரி

(இ) கூற்று 1, 2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

44. பொருத்தி விடை தேர்க

1. அப்துல் கலாம் (i) – செவ்வாய் சுற்றுக் கலன் திட்ட இயக்குநர்

2. வளர்மதி (ii) – சந்திராயன் 1 திட்ட இயக்குநர்

3. அருணன் சுப்பையா (iii) - இந்திய ஏவுகணை நாயகன்

4. மயில்சாமி அண்ணாதுரை (iv) – ரேடர் இமேஜிங் செயற்கைக் கோள் திட்ட இயக்குநர்

(அ) (1) – (ii) , (2) – (iv), (3) – (iii), (4) – (i)

(ஆ) (1) – (ii) , (2) – (i), (3) – (iv), (4) – (iii)

(இ (1) – (iii) , (2) – (iv), (3) – (i), (4) – (ii)

(ஈ) (1) – (iii) , (2) – (ii), (3) – (iv), (4) – (i)

45. ஹண்டர் குழுவின் பரிந்துரைப்படி முதன்முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கிய மாநிலம்

(அ) கேரளா (ஆ) மராட்டியம்

(இ) தமிழ்நாடு (ஈ) டெல்லி

46. தமிழகத்தின் பெண் மருத்துவர் முத்துலட்சுமியுடன் தொடர்பில்லாதது எது ?

(அ) தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் (ஆ) முதல் பெண் ஆசிரியர்

(இ) இருதார தடைச்சட்டம், (ஈ) பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம்.

47. கல்வி இல்லாத பெண்களை பாரதிதாசன் எதனுடன் ஒப்புமைப் படுத்துகிறார்

(அ) பயனற்ற மரம் (ஆ) நீரற்ற குளம்

(இ) திருத்தாத கழனி (ஈ) களர்நிலம்

48. 'விளைவது ' - இச்சொல்லின் பகுபத உறுப்பிலக்கணத்தில் பயின்று வரும் இடைநிலை

(அ) வ் (ஆ) ப்

(இ) த் (ஈ) ட்

49. விதையாமை நாறுவ வித்துஉள மேதைக்கு

உரையாமை செல்லும் உணர்வு - என்ற வெண்பாவின் ஈற்றுச்சீரில் பயின்று வரும் வாய்பாடு

(அ) நாள் (ஆ) மலர்

(இ) காசு (ஈ) பிறப்பு

50. பூவாது காய்க்கும் மரம் உள நன்று **<u>அறிவார்</u>**

மூவாது மூத்தவர் நூல் வல்லார் தாவா – என்ற பாடல் அடியின் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு

(அ) பெயரெச்சம் (ஆ) வினையெச்சம்

(இ) வினையாலணையும் பெயர் (ஈ) தொழிற்பெயர்

51. சென்னை மாகாணத்தைத் 'தமிழ்நாடு' என்று மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றவர்

(அ) காமராசர் (ஆ) அறிஞர் அண்ணா

(இ) இராஜாஜி (ஈ) ம.பொ. சிவஞானம்

52. "நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்" என்றவர்

(அ) ஆபிரகாம் லிங்கன் (ஆ) நியுட்டன்

(இ) காரல் மார்க்ஸ் (ஈ) கலிலியோ

53. கூற்று - இடைச் சொற்கள் தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல

காரணம் - இடைச் சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன

(அ) கூற்று சரி காரணம் தவறு (ஆ) கூற்று தவறு காரணம் சரி

(இ) கூற்று காரணம் இரண்டும் சரி (ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

54. ஒரு சொல் பல பொருளுக்குரிய உரிச்சொல்

(அ) நனி (ஆ) உறு

(இ) தவ (ஈ) கடி

55. பின்வருவனவற்றுள் அறிஞர் அண்ணா பற்றிய தவறான கூற்று எது?

(அ) 'தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று அழைக்கப்பட்டார்.

(ஆ) குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராக இருந்தார்.

(இ) முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இரு மொழிச் சட்டத்தை உருவாக்கினார்.

(ஈ) தஞ்சை சரஸ்வதி மாகால் நூலகத்தை கட்டினார்.

56. சிற்பத் தொழிற்கு உறுப்பாவன

(அ) ஒன்பது (ஆ) பத்து

(இ) பதினொன்று (ஈ) பன்னிரெண்டு

57. பின்வருவனவற்றுள் பாண்டியர் கால சிற்பக்கலைக்கு சான்று அல்லாதது எது?

(அ) திருமயம் (ஆ) திருப்பரங்குன்றம்

(இ) மலைக்கோட்டை (ஈ) குன்றக்குடி

58. கூற்று -1 - தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்று குடைவரைக் கோயில்கள்.

கூற்று -2 - பாண்டியர் காலம் செப்புத்திருமேனிகளின் பொற்காலம்.

(அ) கூற்று 1- சரி, கூற்று 2 - தவறு (ஆ) கூற்று 1 - தவறு, கூற்று 2 - சரி

(இ) கூற்று 1, 2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

59. பொருத்தி விடை தேர்க

1. பல்லவர் காலச்சிற்பங்கள் (i) – பிள்ளையார்பட்டி,

2. பாண்டியர் காலச்சிற்பங்கள் (ii) –இராமேசுவரம்

3. சோழர் காலச் சிற்பங்கள் (iii) - மாமல்லபுரம்,

4. நாயக்கர் காலச் சிற்பங்கள் (iv) – தாராசுரம்

(அ) (1) – (iii) , (2) – (i), (3) – (iv), (4) – (ii)

(ஆ) (1) – (iii) , (2) – (ii), (3) – (iv), (4) – (i)

(இ (1) – (ii) , (2) – (iv), (3) – (iii), (4) – (i)

(ஈ) (1) – (ii) , (2) – (i), (3) – (iv), (4) – (iii)

60. பொதுவர்கள் பொலி உறப்போர் அடித்திடும் அதிர்குரல் கேட்டு அஞ்சி ஓடுவது

(அ) மான் (ஆ) நாகணவாய்ப் பறவை

(இ) குருளை (ஈ) பருந்து

61. "காலத்தின் விளைவு, ஆராய்ச்சியின் அறிகுறி, புரட்சிப்பொறி, உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிடுவது

(அ) சிலப்பதிகாரம் (ஆ) சங்க இலக்கியம்

(இ) தொல்காப்பியம் (ஈ) இராவண காவியம்

62. நிரல்படுத்துக

(அ) மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக் கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்

(ஆ) நம்பி மதுசூதன் மைத்துனன் வந்துஎன்னைக் கனாக்கண்டேன் கைத்தலம் பற்றக் தோழீநான்

(இ கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான் மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்

(ஈ) கனாக்கண்டேன் தோழீநான் மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக் கைத்தலம் பற்ற

63. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க

(அ) அன்பளிப்பு (சிறுகதைகள்) - கு. அழகிரிசாமி

(ஆ) சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) - தி. ஜானகிராமன்

(இ) மின்சாரப்பூ (சிறுகதைகள்) - ஆதவன்

(ஈ) அப்பாவின்சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) - அசோகமித்ரன்

64. "கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்". – என்ற கூற்றுடன் தொடர்புடையவர்

(அ) அழகிரிசாமி (ஆ) புதுமைப்பித்தன்

(இ) அசோக மித்திரன் (ஈ) தி. ஜானகிராமன்

65. " நடந்தாய் வாழி காவேரி "

(அ) மொழிபெயர்ப்பு நூல் (ஆ) கவிதை நூல்

(இ) சிறுகதை நூல் (ஈ) பயண நூல்

66. "அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை" - என்ற கோட்பாட்டுடன் தொடர்புடையவர்

(அ) அழகிரிசாமி (ஆ) புதுமைப்பித்தன்

(இ) அசோக மித்திரன் (ஈ) தி. ஜானகிராமன்

67. பொருத்தமான இணையைத் தேர்வு செய்க

(அ) வன்தொடர் குற்றியலுகரம் - இரும்பு

(ஆ) மென்தொடர் குற்றியலுகரம் - காது

(இ) இடைத்தொடர் குற்றியலுகரம் - நாக்கு

(ஈ) உயிர்த்தொடர் குற்றியலுகரம் - வரலாறு

68. திருவள்ளுவர் கூறும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் ஐந்திணை நிரல்படுத்துக

(அ) அன்பு , நாண் , ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை

(ஆ) ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, அன்பு , நாண்

(இ) கண்ணோட்டம், வாய்மை, அன்பு , நாண் , ஒப்புரவு

(ஈ) கண்ணோட்டம், வாய்மை, அன்பு , நாண் , ஒப்புரவு,

69. " மனதை மலரவைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா? அப்படியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக்கொள் " – என்ற பொன்மொழி யுடன் தொடர்புடையவர்

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் (ஆ) சிதம்பரம் லோகநாதன்

(இ) நேதாஜு சுபாஷ் சந்திர போஸ் (ஈ) இராமு

70. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய இராணுவத்தில் பதவியேற்ற ஆண்டு

(அ) 1942 (ஆ) 1943

(இ) 1944 (ஈ) 1945

71. சீவக சிந்தாமணியின் முதல் 3 இலம்பகங்களை நிரல்படுத்துக

(அ) நாமகள் இலம்பகம் , கோவிந்தையார் இலம்பகம் , கந்தருவதத்தையார் இலம்பகம்

(ஆ) கந்தருவதத்தையார் இலம்பகம்,, கோவிந்தையார் இலம்பகம், நாமகள் இலம்பகம்

(இ) கோவிந்தையார் இலம்பகம், நாமகள் இலம்பகம், கந்தருவதத்தையார் இலம்பகம்

(ஈ) நாமகள் இலம்பகம், கோவிந்தையார் இலம்பகம், கந்தருவதத்தையார் இலம்பகம்

72. பின்வருவனவற்றுள் சீவக சிந்தாமணி பற்றிய சரியான கூற்றைத் தேர்வு செய்க

(அ) சீவக சிந்தாமணி ஐஞ்சிறுங்காப்பியங்களுள் ஒன்று

(ஆ) 30 இலம்பகங்களைக் கொண்டது

(இ) மணநூல் என்று அழைக்கப்படுகிறது

(ஈ) ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார்

73. கிடைக்கப்பெற்ற முத்தொள்ளாயிர பாடல்களின் எண்ணிக்கை

(அ) 101 (ஆ) 102

(இ) 107 (ஈ) 108

74. "பல்வேறு குழாஅத்து இசைஎழுந்து ஒலிப்ப

மாகால் எடுத்த <u>முந்நீர்</u> போல " - என்ற பாடல் அடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

(அ) கடல் (ஆ) முரசு

(இ) தென்றல் (ஈ) மதில்

75. பத்துப்பாடல்களை வரிசைப்படுத்தும் தொகைப்பாடலில் மதுரைக்காஞ்சிக்கு வழங்கப்பெறும் அடைமொழி

(அ) முருகு மதுரைக் காஞ்சி (ஆ) பெருகுவள மதுரைக் காஞ்சி

(இ) மருவினிய மதுரைக் காஞ்சி (ஈ) கோல மதுரைக் காஞ்சி

76. பின்வருவனவற்றுள் ந. பிச்சமூர்த்தி யுடன் தொடர்பில்லாத துறை

(அ) புதுக்கவிதை (ஆ) மொழிபெயர்ப்பு

(இ) சிறுகதை (ஈ) நாடகம்

77. பின்வருவனவற்றுள் காலவாகுபெயர் அல்லாதது எது ?

(அ) கார் அறுத்தான் (ஆ) சித்திரையான் சென்றான்

(இ) மருக்கொழுந்து நட்டான் (ஈ) டிசம்பரைச் சூடினாள்

78. வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் – போன்ற அடைமொழிகளுடன் தொடர்புடையவர்

(அ) காமராசர் (ஆ) அறிஞர் அண்ணா

(இ) தந்தைப் பெரியார் (ஈ) அயோத்தி தாசர்

79. தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்'

(அ) காமராசர் (ஆ) அறிஞர் அண்ணா

(இ) தந்தைப் பெரியார் (ஈ) அயோத்தி தாசர்

80. "முண்டி மோதும் துணிவே இன்பம்

உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி " – என்ற கவிதை வரிகளுடன் தொடர்புடையவர்

(அ) ந. பிச்சமூர்த்தி (ஆ) கு.ப.ராஜகோபாலன்

(இ) வல்லிக்கண்ணன் (ஈ) நாமக்கல் கவிஞர்

81. 'அல்லங்காடி' – என்ற சொல்லின் சரியான பிரிப்பு முறை

(அ) அல்லல் + அங்காடி (ஆ) அல்லல் + ஆடி

(இ) அல்லது + அங்காடி (ஈ) அல் + அங்காடி

82. " இன்மை என்று எதையும் புறக்கணிக்க வேண்டாம் " என்ற கூற்றுடன் தொடர்புடையவர்

(அ) காரல் மார்க்ஸ் (ஆ) லாவோட்சு

(இ) சர் ஐசக் நியுட்டன் (ஈ) தாமஸ் ஆல்வா எடிசன்

83. எதனை ஆக்க வேண்டும் என யசோதர காவியம் கூறுகிறது

(அ) ஞானம் (ஆ) வெகுளி

(இ) அறம் (ஈ) விரதம்

84. பின்வருவனவற்றுள் யசோதர காவியம் பற்றிய தவறான கூற்று எது ?

(அ) ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று யசோதர காவியம்.

(ஆ) இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப்பெற்றதாகும்

(இ) இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை

(ஈ) இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது

85. யாப்பிலக்கணம் என்பது

(அ) நாடகம் இயற்றும் முறைகளைக் கூறுவது

(ஆ) சிறுகதை இயற்றும் முறைகளைக் கூறுவது

(இ) புதினம் இயற்றும் முறைகளைக் கூறுவது

(ஈ) கவிதை இயற்றும் முறைகளைக் கூறுவது

86. யாப்பின் உறுப்புகளை நிரல்படுத்துக

(அ) சீர், தளை, அடி, தொடை, எழுத்து, அசை

(ஆ) அசை , சீர், தளை, அடி, தொடை , எழுத்து

(இ) எழுத்து, அசை , சீர், தளை, அடி, தொடை

(ஈ) தளை, அடி, தொடை , எழுத்து, அசை , சீர்

87. நேரொன்றாசிரியத்தளை

(அ) மாமுன் நேர் (ஆ) மாமுன் நிரை

(இ) விளம் முன் நேர் (ஈ) விளம் முன் நிரை

88. பின்வரும் அடி வகைகளை நிரல்படுத்துக

(அ) அளவடி, நெடிலடி, கழிநெடிலடி, குறளடி, சிந்தடி

(ஆ) நெடிலடி, கழிநெடிலடி. குறளடி, சிந்தடி, அளவடி

(இ) கழிநெடிலடி. குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி

(ஈ) குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி

89. "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது" - என்று ஆல்பர்ட் சுவைட்சர் புகந்த தமிழ் நூல்

(அ) சங்க இலக்கியம் (ஆ) திருக்குறள்

(இ) நாலடியார் (ஈ) சிலப்பதிகாரம்

90. "படுதிரை வையம் பாத்திய பண்பே" – என்று குறிப்பிடும் நூல்"

(அ) சங்க இலக்கியம் (ஆ) திருக்குறள்

(இ) தொல்காப்பியம் (ஈ) சிலப்பதிகாரம்

91. "பண்புடைமையாவது யாவர் மாட்டும் அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும் பகுத்து உண்டலும் பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை" – என பண்புடைமை என்னும் அதிகாரத்திற்கு உரை கண்டவர்

(அ) பரிப்பெருமாள் (ஆ) மு. வரதராசனார்

(இ) மணக்குடவர் (ஈ) தருமர்

92. " யாதும் ஊரே யாவரும் கேளிர் "- என்ற கணியன் பூங்குன்றனாரின் கொள்கையுடன் ஒன்றுபடும் மேலைநாட்டு சிந்தனையாளர்கள்

(அ) சாப்பியன்ஸ் (ஆ) செனக்கா

(இ) ஸ்டாயிக்வாதிகள் (ஈ) லெனினியம்

93. உலகத் தமிழாய்வு மன்றம் உருவாகவும், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் உருவாகவும், காரணமாக இருந்தவர்

(அ) பரிதிமாற் கலைஞர் (ஆ) புலவர் இளங்குமரனார்

(இ) மறைமலை அடிகள் (ஈ) தனிநாயகம் அடிகள்

94. "பழங்களை விடவும் நசுங்கிப் போனது அடுத்த மனிதர்கள் மீதான அக்கறை " – என்ற கவிதை வரிகளுடன் தொடர்புடையவர்

(அ) அழகிய பெரியவன் (ஆ) கல்யாண்ஜி

(இ) சல்மா (ஈ) மனுஷ்ய புத்திரன்

95. வண்ணதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற சிறுகதைத் தொகுப்பு

(அ) ஒரு சிறு இசை (ஆ) கலைக்க முடியாத ஒப்பனைகள்

(இ) உயரப் பறத்தல் (ஈ) ஒளியிலே தெரிவது

96. குறுந்தொகையின் அடிவறையறை

(அ) 3 அடி முதல் 6 அடி வரை (ஆ) 6 அடி முதல் 12 அடி வரை

(இ) 4 அடி முதல் 8 அடி வரை (ஈ) 2 அடி முதல் 16 அடி வரை

97. பின்வருனவற்றுள் சு. சமுத்திரம் அவர்களின் சிறுகதைத் தொகுப்பு அல்லாதது எது ?

(அ) வாடா மல்லி (ஆ) பாலைப் புறா

(இ) மண்சுமை (ஈ) வேலைக்காரி

98. 'மலர்ப்பாதம்'- என்ற உவமைத் தெகையில் பயின்று வரும் உவமேயம்

(அ) பாதம் (ஆ) மலர்

(இ) போன்ற (ஈ) மென்மை

99. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு – என்ற குறளில் பயின்று வரும் அணி

(அ) சொல் பின்வரு நிலையணி (ஆ) பொருள் பின்வரு நிலையணி

(இ) சொற்பொருள் பின்வரு நிலையணி (ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

100. பொருத்தி விடை தேர்க

1. மனிதம் (i) – Simile

2. கட்டிலாக் கவிதை (ii) – Metaphor

3. உவமையணி (iii) - Free verse

4. உருவக அணி (iv) – Humane

(அ) (1) – (iv) , (2) – (ii) , (3) – (i) , (4) – (iii)

(ஆ) (1) – (iv) , (2) – (iii) , (3) – (i) , (4) – (ii)

(இ (1) – (ii) , (2) – (iv) , (3) – (iii) , (4) – (i)

(ஈ) (1) – (ii) , (2) – (i) , (3) – (iv) , (4) – (iii)